**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஊத்தங்கரை,</u>**

**<u>கிருஷ்ணகிரி மாவட்டம்.</u>**

அசல் வழக்கு எண். 58/2018 நாள்: 12.12.2018

இந்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர், நீதிமன்றத்தில் திரு.மோகன் பென்ஞ்ச் கிளார்க் அவர்களால் சாட்சியம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | |
|---|---|
| பெயர் | : சென்னையன் |
| தந்தை பெயர் | : கிருஷ்ணன் |
| கிராமம் : | தாலுக்கா : |
| வயது : | வேலை : |

**<u>முதல் விசாரணை:</u>**

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் வாதி தரப்பில் சாட்சியாக முன்னிலையாகி நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள இந்த நிரூபண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள அனைத்து சங்கதிகளும், என்னால் சொல்லப்பட்டு தயாரிக்கப்பட்டதாகும். இதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு நன்கு தெரியும். இதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

1. 20.06.2016 தேதியிட்ட பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத் கடன்னுறுதி சீட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும்
2. 17.02.2018 தேதியிட்ட பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட சட்ட அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும்
3. 17.02.2018 தேதியிட்ட சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டதற்கான அஞ்சல் ரசீது வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

எனவே எனது பிராதில் வேண்டப்பட்டுள்ளபடி தீர்ப்பாக வேண்டிக்கொள்கிறேன்.